உ

சிவமயம்



மூளாய் தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும்,

பிரபல வர்த்தகரும்

எல்லோராலும் "இனியவர்" என அன்போடு

அழைக்கப்பட்டவருமான

அமரர் உயர்திரு

# கதிரவேலு இளையதம்பி

அவர்கள்

இறையடி எய்தியமை குறித்து

வெளியிடப் பெற்ற

# நினைவு மலர்

**13-07-1991**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் உயர்திரு

# கதிரவேலு இளையதம்பி

அவர்கள்



தோற்றம்:
**08-10-1920**

மறைவு:
**13-06-1991**

## வெண்பா

ஆண்டு பிரசோற்பத்தி ஆனதிங்கள் வைகாசி
நீண்டு குருவாரம் பிரதமையில் - மீண்பிங்கு
வாராத பெறும் பேறு பெற்றனரே இளையதம்பி
சீரோங்கு விநயகர் (திரு) அடிநீழல் சிறந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்துமணித் தேரோடும் மூளாயம் பதியினிலே
உத்தமராம் கதிரவேலு சின்னப்பிள்ளை தம்முடனே
இத்தரைக்கு தந்தமகன் இணையில்லார் இளையதம்பி
வித்தகராய் வாழ்ந்தெமையே விட்டகன்றார் விண்ணுக்கு

காரோடும் கடைகளோடும் கதிர்விளையும் காணியோடும்
பாரோடு வாழவிங்கு பார்வதியார் ப(ா)ங்கினோடும்
சீரோடு மக்களீன்றோ சிறப்புற நம் இளையதம்பி
பேரோடும் புகழுமுற்றோ பெருவாழ்வும் பெற்றுமீண்டர்

கண்ணன் களலினிற்கே காலமெல்லாம் அபிசேகம்
அண்ணனுடன் கந்தனுக்கோ எப்போதும் பஜனைவிழா
முன்னின்று செய்துவரும் மேன்மையுறு இளையதம்பி
என்றுமினி அவனடிக்கே என்றெமையும் விட்டகன்றார்

**பேரோடு வந்து வாழ்ந்து சிறந்திங்கு**
**புகழோடு போனார்.**

# அமரர் க. இளையதம்பி
# அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# அன்புடன் எந்தைக்கே இந்நூல்

# சமர்ப்பணமாக

மூளாயூர் தந்ததோர் மீகறிஞர் நீரெனவே
நாளெலாம் உமைப்போற்றி நாமெலாம் பணிந்
[ திருந்தோம்
வாழும் போதிலுயர் வல்லமையோடெமை வளர்த்தீர்
பாயும் நதியானீர் பாசத்தைப் பருகிநின்றோம்
போயும் வருகிறேன் என்றுகூடச் சொல்லாமல்
போனீர் பொன்னுடலம் பெற்றினியும் வருவீரோ
என்றோ நாமெல்லாம் எந்தையுமைத் தேடி
சிந்தையினாலிச் சிறுநூலை தந்தோம் உமதடிக்கே
[ பணிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் திரு க. இளையதம்பி அவர்களின்

# வாழ்க்கை வரலாறு

நல்வளமெல்லாம் மலிந்து விளங்கும் நமது மூளாய் கிராமத்திலே பல குடும்பத்தவர்களின் வரலாற்றுப் பெயர்கள் இங்கே நின்று நிலைத்து வாழ்வதை நாம் காண முடிகிறது. இந்த வகையிலே அமரர் திரு கதிரவேலு சின்னப்பிள்ளை தம்பதியர்களின் குடும்பப் பெயரான கதிரவேலு குடும்பம் என்கின்ற பெயரும் அதற்கு விதிவிலக்கல்ல அப்பெயரும் இங்கே நின்று நிலைத்து வாழ்வதை நாம் காணமுடிகின்றது

பல்வளங்களெல்லாம் பல்கிப் பெருக சீரோடும் சிறப்போடும் சிறந்து விளங்கிய அமரர் திரு கதிரவேலு சின்னப்பிள்ளை தம்பதியர்களின் குடும்பத்திலே அவர்களின் குடும்பப் பெயர் சிறந்து விளங்க வாழ்ந்த வரலாற்று நாயகர் இங்கே நாம் சரித்திரம் கூறும் அமரர் திரு க. இளையதம்பி அவர்களாவார்.

வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து அமரத்துவம் எய்திய அமரர்கள் திரு மாணிக்கம், திரு நல்லதம்பி திரு ஆறுமுகம் திருமதி தெய்வானைப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரனாக 1920ம் ஆண்டு ஐப்பசி மாதம் எட்டாம் திகதி (08-10-1920) அமரர் க. இளையதம்பி அவர்கள் கதிரவேலு சின்னப்பிள்ளை தம்பதியர்க்கு மனம் நிறைந்த மகனாக இம்மண்ணில் வந்துதித்தார்.

அமரர் திரு க. இளையதம்பி அவர்கள் செல்லப்பிள்ளையாகவும் இளைய ஆண் பிள்ளையாகவும் தம் குடும்பத்தில் பிறந்ததனால் அவருக்கு தாய், தந்தையர்கள், அன்போடும் பாசத்தோடும் 'இளையதம்பி' எனப் பெயரிட்டு வளர்த்தார்கள். திரு இளையதம்பி அவர்கள் குழந்தைப் பிள்ளையாக இருக்கும் போதே சிறந்த புத்தி சாதுரியம் உள்ளவராகவும், கல்வி கேள்விகளில் வல்லவராகவும் ஊக்கமும் உற்சாகமும் உடையவராகவும் விளங்கினார்.

காலச்சக்கரம் சுழன்று வரும்போது தன் அன்புச் சகோதரர்களின் பாச அரவணைப்பிலே தாய் தந்தையரோடு வாழ்ந்த அந்நாளில் எமது கிராமத்திலே பரந்துபட்ட நிலப்பரப்பிற்கு சொந்தக்காரர்களாகி கமத்தொழில் செய்து வந்த தன் பெற்றோருக்கு பெரிதும் உதவி புரிபவராக அமரர் அவர்கள் விளங்கினார். அக்கால சூழ்நிலைக்கு ஏற்ற வகையிலே போதும் என்ற அளவிற்கு கல்வியைப் பெற்று பள்ளிப் படிப்பை முடித்துக் கொண்ட இவர் நிரந்தர தொழில் ஒன்றினைத் தேடிக் கொள்ள முற்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்காலத்திலே எமது மூளாய் கிராமத்திலே கடமை - கண்ணியம் - கட்டுப்பாடு, நீதி - நியாயம் - நேர்மை இவற்றின் அடிப்படையிலே பேரோடும் புகழோடும் ஒரு சிறந்த வர்த்தகராக விளங்கியவர். இவரின் சகோதரர் அமரர் உயர்திரு நல்லதம்பி அவர்களாவார் இவரின் வியாபார நிலையத்தினை மக்கள் எல்லோரும் "நல்லவர் கடை" என்று சொல்வது இங்கே குறிப்பிட வேண்டியதாகும். இச் சகோதரர் நல்லதம்பி அவர்களின் வழி காட்டலின் பேரில் தானும் ஓர் சிறந்த வர்த்தகராக வேண்டுமென்று விரும்பிய அமரர் திரு க. இளையதம்பி அவர்கள் வர்த்தகத் துறையிலே ஈடுபட்டு சிறந்த பேரும் புகழும் பெற்றார். பலதரப்பட்ட வாகனங்களுக்குச் சொந்தக்காறனுகவும், மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைக்கு அண்மையிலே அமைந்திருந்த முருகன் ஸ்ரோர்ஸ் என்னும் பிரபல வர்த்தக நிலையத்தின் உரிமையாளரர்கவும் திகழ்ந்தார். மக்கள் இவ் வியாபார நிலையத்தினை "இளையவர் கடை" என்று உரிமையோடு அழைப்பதை நாம் இங்கே குறிப்பிட வேண்டும்.

இளமைப் பருவத்திலே இளமைப் பருவத்திற்கேற்ற சிறந்த குணுதிசயங்களோடு இவர் திகழ்ந்தார் அப்பருவத்திலேயே இவருக்கு திருமணம் செய்து வைத்துவிட வேண்டுமென விரும்பிய அமரர் அவர்களின் பெற்றோரும் பெரியோரும் தொல்புரம் கிராமத்திலே சீரோடும் சிறப்போடும் வாழ்ந்து வந்த அமரர் திரு கந்தப்பு நாகமுத்து தம்பதியர்களின் அன்பு மகள் பாறுவதியார் அவர்களை பெண் பார்த்து 1952ம் ஆண்டு ஆவணி மாதம் 21ம் திகதி இவர் இல்வாழ்வில் இனிய அடிவைக்கத் திருமணம் செய்து வைத்தார்கள்.

அமரர் அவர்களின் குழந்தைப் பருவம், இளைஞர் பருவம் பள்ளிப் பருவம், தொழிற் பருவம் எல்லாம் சிறந்த முறையிலே அமைந்தது போலவே இவருடைய இல்வாழ்க்கையும் சிறந்த முறையிலே அமைந்தது குடும்ப வாழ்க்கையிலே கணவன் மனைவியாக அமரர் திரு க. இளையதம்பி அவர்களும் பாறுவதியார் அவர்களும் அன்போடும் பாசத்தோடும் ஒருவரை ஒருவர் நேசித்து இணைபிரியா அன்றில்களாக வாழ்ந்து வந்தனர். வாழ்க்கையிலே இவர்கள் ஒருவரை ஒருவர் எவ்வாறு நேசித்தார்கள் என்பதை இவர்கள் பெற்றுக் கொண்ட அன்புச் செல்வங்களான பிள்ளைச் செல்வங்களிலிருந்து நாம் அறிந்து கொள்ள முடியும்.

அமரர் அவர்களுக்கு இல் வாழ் இனிய புத்திரர்களாக பன்னிரண்டு பிள்ளைச் செல்வங்கள் பிறந்தனர். தனலட்சுமி அவர்களை மூத்த மகளாகப் பெற்ற இவர் மகாலிங்கம் அவர்களை மூத்த மருமகனுகவும் காந்தரூபன், தயாநிதி, ஜனிதா, மதனரூபன் ஆகியோரைப் பேரப்பிள்ளைகளாகவும் பெற்றுக் கொண்டார். கணேசானந்தன் அவர்களை மூத்தமகனுகப் பெற்றுக் கொண்ட இவர் பவளராணி அவர்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூத்த மருமகளாகவும் நேருஜன், மயூரி ஆகியோரை பேரக் குழந்தை களாகவும் பெற்றுக் கொண்டார் ஸ்ரீமுருகானந்தன் என்பவரை அன்பு மகனாகப் பெற்ற அமரர் அவர்கள் அவர் இறையடி சேர்ந்தமையை மனவேதனையோடு தாங்கிக் கொண்டார். ஜேர்மனி நாட்டில் வாழும் வித்தியானந்தன் அவர்களை மகனாகப் பெற்ற அமரர் அவர்கள் சிவ யோகம் அவர்களை மருமகளாகவும் சாரூபன் அவர்களை பேரக் குழந் தையாகவும் பெற்றுக் கொண்டார். சீதாலட்சுமி அவர்களை மகளாகப் பெற்ற இவர் அவர் இறையடி சேர்ந்தமையையு மிகுந்த வேதனை யோடு தாங்கிக் கொண்டார். விஜயராணி அவர்களை மகளாகப் பெற்றுக் கொண்ட அமரர் அவர்கள் சதானந்தன் அவர்களை மருமக னாகவும் டஜனிதாஸ், ஜீவதாஸ் அவர்களை பேரப் பிள்ளைகளாகவும் பெற்றுக் கொண்டார். பவானந்தன் அவர்களை மருமகனாகப் பெற்ற அமரர் அவர்கள் சூரியகலா அவர்களை மருமகளாகவும் நிஜந்தா அவர் களை பேரக் குழந்தையாகவும் பெற்றுக் கொண்டார். மதனவதி அவர்களை மகளாகப் பெற்றுக் கொண்ட அமரர் அவர்கள் முத்து ராசா அவர்களை மருமகனாகவும் ரஜனிகாந், சத்தியபாமா, கோபிகாந், துர்க்கா ஆகியோரைப் பேரப்பிள்ளைகளாகவும் பெற்றுக் கொண்டார் கோபாலச்சந்திரன் அவர்களை மகனாகப் பெற்ற அமரர் அவர்கள் அவரை இந்தியாவிலும் யோகானந்தன் அவர்களை மகனாகப் பெற்ற அமரர் அவர்கள் அவரை தாய்வான் நாட்டிலும் சிறப்போடு தொழில் செய்ய வைத்து பெருமை கொண்டுள்ளார். மகிளானந்தன் அவர்களை மகனாகப் பெற்ற அமரர் அவர்கள் சியாமினி அவர்களை மருமகளாகவும் சுஜீபன் அவர்களை பேரப்பிள்ளையாகவும் பெற்றுக் கொண்டார். இறு தியாக நவரஞ்சினி என்கின்ற அன்பு மகளைப் பெற்று அவரை மேற் படிப்பு படிப்பிக்கும் அவாவினைக் கொண்டவராக விளங்கினர்.

அமரர் உயர்திரு க. இளையதம்பி அவர்கள் தன் குடும்ப வாழ்க்கையை திறம்பட நடாத்தியது மாத்திரமன்றி பொது வாழ்க்கையிலும், ஆலய பணிகளிலும் பங்கேற்றுத் திறம்பட செய் திருக்கின்றார். வியாபாரத் துறையில் ஈடுபட்டதோடு விவசாயத் தொழிலில் ஈடுபாடு கொண்டவராகவும் தன் பிள்ளைகளின் தொழில் ஸ்தாபனங்களுக்கு உதவி செய்பவராகவும், பரந்துபட்டு வியாபித் திருந்த கதிரவேலு குடும்பத்தாரின் காவலனாகவும் ஊரார், உற்றார் உறவினர், நண்பர்கள் யாவருக்கும் அன்புடையவராகவும் விளங்கி "இளையவர்" குடும்பம் ஒரு பூரண குடும்பம் என்று எல்லோராலும் போற்றப்படும் வேளை 13-06-1991 அன்று தனது எழுபத்திஓராம் வயதில் ஊரார், உற்றார், உறவினர் குடும்பத்தார் அனைவரும் ஆறாத் துயரில் கலங்கி நிற்க காலன் கைப்பற்றி விண்ணுலகத்தாற்கு விருந் தினரானார்.

அன்னாரின் ஆத்மா சாந்தி பெறுவதாக
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

## தேவாரம்

மற்றுப் பற்றெனக் கின்றி
நின்திருப் பாதமேமனம் பாவித்தேன்
பெற்றலும் பிறந் தேனினிப்
பிறவாத தன்மைவந் தெய்தினேன்
கற்றவர் தொழு தேத்தும் சீர்கறை
யூரிற் பாண்டிக் கொடுமுடி
நற்றவாவுனை நான் மறக்கினுஞ்
சொல்லுநா நமச்சிவாயவே.

## புராணம்

இறவாத இனப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்பு உண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும்போது உன் அடியின்கீழ் இருக்க என்றார்.

## நாராயணன் துதி

குலம்தரும் செல்வம் தந்திடும்
அடியார் படுதுயர் ஆயின எல்லாம்
நிலந்தரஞ் செய்யும் நீள்விசும்(பு) அருளும்
அருளொடு பெருநிலம் அளிக்கும்
வளந்தரும் மற்றுந் தந்திடும்
பெற்ற தாயினும் ஆயின செய்யும்
நலந்தருஞ் சொல்லை நான்கண்டு கொண்டேன்
நாராயணா வென்னும் நாமம்.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எல்லோர்க்கும் இளையவராய் வாழ்ந்தார் இளையதம்பி

இளையவரே என்றுஉமை அனைவருமே அழைத்திடவோ
இளையதம்பி என்றுநீரும் இவ்வுலகில் பேர் கொண்டீர்
தலைவனாய் வாழ்ந்தீர் தத்துவங்கள் சொன்னீர்
இத்தரையில் உம்புகழ்தான் எத்தனைகள் சொல்வோம்
வித்தகனே நித்தமெமை நாடிவந்த உத்தமனே
சித்தத்தை சிவன்பாலோ மெத்தவம் நீர்வைத்து
சுற்றத்தார் சூழஎமை சோகத்தில் ஆழ்த்தி
சொற்கத்தை தேடிநீர் உடல் சோதியுமானீர்.

## அன்புடைய குடும்பத் தலைவரின் பிரிவால் அல்லலுறும் மனைவி, மக்கள், மருமக்கள் பேரப்பிள்ளைகள்

பொழுது விடிந்ததும் பூகம்பம் எழுந்ததோ
அழுது நாம்புலம்ப பழுதொன்று வந்தது
தொழுத தெய்வங்கள் தூரவே சென்றதோ
தூயரும் தந்தை உயிர் பிரிந்து போனது
விதியென்று எண்ணிநாம் விடைசொல்லி ஆறவோ
வீழ்ந்து நம்வீட்டின் ஆருயிர் அல்லவோ
இதயங்கள் ஆறுமோ இனியவர் வருவரோ
எமகென்றும் எம்தந்தை இளையவர் அல்லவோ.

## தேற்றம்

தூயோனும் தந்தை இளையதம்பி
துயரக் கடலில் உமையாழ்த்தி
போயினை சென் றெண்ணி நீர்
புலம் பலாமோ பயனுண்டோ
தாயின் நல்ல தயாளனும்
தாதை ஆட்ட ஆடரங்கில்
போயும் வந்தும் ஆடுகின்றோம்
போதுமிப் பிறப்பென்று எண்ணுமினே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி சொல்கின்றோம்.

எமது பாசமிகு குடும்பத் தலைவர் அமரர் திரு கதிரவேலு இளையதம்பி அவர்கள் நோய் வாய்ப்பட்டு இருந்தபோது வைத்திய ரீதியில் அவருக்கு உதவியோர்க்கும் சுகவீனம் பார்ப்பதற்கும் வந்து ஆறுதல் அளித்தவர்களிற்கும் அன்னார் அமரத்துவம் அடைந்த செய்தி கேட்டு ஓடோடிவந்து பலவழிகளிலும் உதவி ஒத்தாசை புரிந்தவர்களிற்கும் இறுதிக் கிரிகைகளில் பங்கு கொண்டும் அனுதாபச் செய்திகள் அனுப்பியும் ஆறுதல் அளித்தவர்களிற்கும் அமரர் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகளில் பங்கு கொண்டு அவரின் ஆத்ம சாந்திக்கு பிரார்த்தித்து உதவியோர் அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி வணக்கம்

இங்ஙனம்
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

மூளாய் தெற்கு,
சுழிபுரம்.
13-07-1991

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org